| | | |
|---|---|---|
| சாட்சி : DW3<br>சன்னாசி | அ.வ.எண். 289/2011 | 03.09.2024 |

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

2) எனது தகப்பனார் கையொப்பம் செய்த உயில் ஆவணத்தை எப்போது பார்த்தேன் என்றால் பார்த்தில்லை ஆனால் எனது தகப்பனார் தான் கையொப்பம் செய்தார். மேற்படி உயில் ஆவணத்தை பார்க்காமல் நான் எவ்வாறு உயில் ஆவணத்தில் எனது தகப்பனார் கையொப்பம் செய்தார் என்று சொல்கிறேன் என்றால் 2ம் பிரதிவாதி சொன்னதன் அடிப்படையில் சொல்கிறேன். மேற்படி விபரத்தை தவிர எனக்கு உயில் ஆவணத்தை பற்றி வேறு எந்த விபரமும் தெரியாது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.